ஸ்ரீ :
ஸ்ரீமதே ராமானுஜாய நம:
ஸ்ரீமத் வரவர முநயே நம: ஸ்ரீமத் வரத குரவே நம:

# கோயில் கந்தாடை அண்ணன் - வருஷ திருநச்சத்திரம் - புரட்டாசி – பூரட்டாதி



## தனியன்

ஸ்ரீரம்யவரமௌநீந்த்ர ஸ்ரீபாதாப்ஜமதுவ்ரதம் /
வ்ருஷபே மைத்ரபே ஜாதம் வரதார்யமஹம் பஜே//

ஸகல வேதாந்தஸாரார்த்த பூர்ணாஸயம்
விபுலவாதுலகோத்ரோத்பவாநாம் வரம் /
ருசிரஜாமாத்ருயோகீந்த்ர பாதாஸ்ரயம்
வரதநாராயணம் மத்குரும் ஸம்ஸ்ரயே //

## வாழித்திருநாமம்

தேனமருமலர் முளரித் திருத்தாள்கள் வாழியே
திருச்சேலை யிடைவாழி திருநாபி வாழியே
தானமரு மலர்க்கண்கள் தனியுதரம் மார்பம்
தங்குதொங்கு முபவீதம் தடந்தோள்கள் வாழியே
மானபரன் மணவாள மாமுனி சீர்பேசும்
மலர்ப்பவளவாய்வாழி மணிமுறுவல் வாழியே
ஆனனமுந்திருநாமமணி நுதலும் வாழியே
அருள் வடிவன் கந்தாடையண்ணனென்றும் வாழியே.

பேராதநம்பிறப்பைப் பேர்க்கவல்லோன் வாழியே
பெரிய பெருமாளருளாற் பெருமை பெற்றோன் வாழியே
எராருநன் மதியினேற்றமுள்ளோன் வாழியே
எதிராசன் தரிசனத்தை யெடுத்துரைப்போன் வாழியே
பாராரநன்புகழைப் படைக்க வல்லோன் வாழியே
பகர்வசனபூடணத்தின் படியுடையோன் வாழியே
ஆராமஞ்சூழ்கோயி லவதரித்தோன் வாழியே
அவனிதொழுங்கந்தாடை யண்ணனென்றும் வாழியே.

ஆசார்யர் - பெரியஜீயர்
திருவவதாரஸ்தலம் - கோயில்
சிஷ்யர்கள் - கோயில்கந்தாடை அப்பன், நாயன், பிள்ளை அப்பா
திருநாமங்கள் - அண்ணன், வரதநாராயணன்
மாமுனிகள் ஏற்படுத்திய அஷ்டதிக்கஜங்களில் இவரும் ஒருவர்.

இவர் வாதுல கோத்ரத்தல் முதலியாண்டான் வம்சத்தில் புரட்டாசி மாதம் பூரட்டாதி நட்சத்திரத்தில் திருவரங்கத்தில் அவதரித்தார். மாமுனிகள் தம்மிடம் இருந்த அழகியசிங்கர் விக்ரஹத்தை திருவாராதநப்பெருமாளாக இவருக்கு அளித்தார். இவருடைய பால்யத்திலேயே திருத்தகப்பனார் பரமபதம் அடைந்தார். அதனால் கோவலில் இவர் வம்சத்தாருக்கு கிடைக்கவேண்டிய மரியாதைகள் கிடைக்கவில்லை. எம்பெருமானார் இவர் கனவில் தோன்றி மாமுனியை ஆச்ரயிக்கும்படி தெரிவத்தார். மாமுனிகள் இந்த வம்சத்தாருக்கு மீண்டும் மரியாதைகள் கிடைக்கும் படி எற்பாடுகள் செய்தார்.

இவர் உத்தம நம்பி, எறும்பியப்பா, அப்பிள்ளை, அப்பிள்ளார் ஆகியோரையும் மாமுனிகளிடம் ஆச்ரயிக்கச் செய்தார். இவர் கீழ்கண்ட ஸ்வாமிகளை தம்முடைய அஷ்டதிக் கஜங்களாக நியமித்தார்.

கந்தாடையப்பன் (திருத்தம்பியார்), திருக்கோபுரத்து நாயனார், சுத்தசத்வம் அண்ணன், திருவாழி ஆழ்வார் பிள்ளை, கந்தாடை நாயன் (திருக்குமாரர்), ஜீயர் நாயனார் (மாமுனிகள் திருக்குமாரர்), ஆண்ட பெருமாள் நாயனார், ஜயன் அப்பா.

## இவர் அருளியுள்ள உபதேசரத்தினமாலை தனியன்

முன்னந்திருவாய்மொழிப்பிள்ளை தாமுபதேசித்த. நேர்
தன்னின்படியைத் தணவாத சொல் மணவாளமுனி
தன்னன்புடன்செய் உபதேசரத்தினமாலைதன்னை
தன்நெஞ்சுதன்னில் தரிப்பவர் தாள்கள் சரண் நமக்கே.

## இவர் அருளிச் செய்துள்ள மணவாளமாமுனிகள் கண்ணிநுண்சிறுத்தாம்பு *

### தனியன்

எக்குணத்தோர் எக்குலத்தோர் எவ்வியல்போர் ஆயிடினும்
அக்கணத்தே நம் இறைவராவாரே - மிக்க புகழ்க்
காரார் பொழில் கோயில் கந்தாடை அண்ணனென்னும்
பேராளனை அடைந்தபேர்.

### கண்ணிநுண்சிறுத்தாம்பு

சீருற்ற செஞ்சொல் திருவாய்மொழிப் பிள்ளை செம்முகமும்
தாருற்ற மார்பும் தளிரேய் பதங்களும் தன்மனத்துப்
பூரித்து வாழும் மணவாளமாமுனி பொன்னடிகள்
பாரில் தனித்த அடியேன் சரணென்று பற்றினனே. 1.

பற்றினன் செம்மைத் திருவாய்மொழிப்பிள்ளை பாதங்களே
உற்றனன் செம்மறை யுள்ளதெல்லாம் இவை உண்மை யென்றே
கற்றனன் கோயில் மணவாளமாமுனிக்கார்முகிலைப்
பெற்றனன் இங்கு அடியேன் இனிமேல் பிறவாமலுக்கே. 2.

பிறவாமல் வாழ்விக்கும் பேரருளாள் பெருமையென்றும்
துறவாத சிந்தை எதிராசன் துய்யபதங்கள் நெஞ்சில்
மறவாத சீலன் மணவாளமாமுனி மாமலர்த்தாள்கள்
பறையாத வாசகர் யாரவர் பஞ்சமாபாதகரே. 3.

பாதகமுள்ளவை தாமே ஒழித்துப் பரிந்தவர்க்குச்
சாதகமானதும் ஈதென்று கொண்டு சரண்கொடுக்கும்
மாதகவோன் மணவாளமாமுனிப்பரன் மாமலர்த்தாள்
பாதுகையைச் சரணாய் முடிமேல் கொண்டு பற்றினர்க்கே. 4.

நற்கேசவன் தமர் நற்றவத்தோர் நயனங்களுக்குப்
பொற்கோல மேனியன் பூதலத்தோர் செய்த புண்ணியமாம்
முக்கோல் தரித்த மணவாளமாமுனி மூர்த்திதனை
எக்கோடி காலமும் சிந்தை செய்வார் தமக்கீடில்லையே. 5.

இல்லை என்றே எண்ணி என் பவக்காட்டை எரியிலிட்டு
நல்லருள்மாரிபெய்து என்னைத் தளிர்ப்பித்து நன்கு தன்பால்
தொல்லருள் ஞானம் விளைத்து ஆழ்ந்த போகத்தைத் துய்ப்பிக்கவே
வல்லவன் கோயில் மணவாளயோகியை வாழ்த்துவேனே. 6.

வாழ்த்துவேன் எந்தை மாணவாளமாமாமுனி மாமலர்த்தாள்
வாழ்த்துவேன் யானவன் தாளிணைக்கீழ்ச் சிரந்தாரணியில்
காழ்த்திடும் செல்வமுதல் முக்குறும்பும் கரிசறவே
பாழ்த்திடும் என்றனன் அதிகோர பாவங்கள் பற்றறவே. 7.

பாவங்கள் பற்றறும் பாசங்கள் பற்றறும் பற்றிவைகும்
கோவங்கள் பற்றறும் குற்றங்கள் பற்றறும் கோடிசன்மத்
தாவங்கள் பற்றறும் தண்ணரங்கன் புகழ் சாந்த குண
தீவன் கருணை மணவாளயோகியைச் சிந்திக்கவே. 8.

சிந்தித்து அரங்கரைச் சிந்தை பயங்கெடச் சென்னிதன்னால்
வந்தித்து நிச்சலும் வாயார வாழ்த்துமெய்ம் மாமறையோர்
புந்திக்குள் மேவும் வரயோகி தம்வைப் புகைந்துசிலர்
சிந்திக்கினுமே விடார் இது காண் அவர் நீர்மை நெஞ்சே. 9.

நெஞ்சே அனைய அடியார் நிறங்கொண்ட நிச்சயமாம்
மஞ்சேறு சோலை அரங்கப்பதி தனில் வாதியர்க்கு
நஞ்சேயனையே மணவாளயோகி இந்நாளளிக்கும்
தம்சேவை தன்னை இகழ்வார்க்கல்லால் அவர்தாமிட்டரே. 10.

இட்டர்கள்வாழ எதிராசர் வாழ இருநிலத்தே
சிட்டர்கள் வாழ நம் தேசிகர் வாழச் செகத்திலுள்ள
துட்டர்கள் மாள மணவாளமாமுனி தோன்றினனே
எட்டு மிரண்டும் அறியாரிங்கு ஏசினும் யாவருமே. 11.

யாவருமுய்ய மணவாளயோகி தயாளுவென்னப்
பூமகள் மண்மகள் புண்ணியமாய் இந்தப் பூதலத்தே
தாம் அவதாரம் செயாதிருந்தால் சடகோபர் திரு
வாய்மொழியோடு கடலோசையோடு என்னவாசியுண்டே? 12.

வாசியறிந்த வதரியில் நாரணனார் மனங்கொள்
தேசுடை எந்தை மணவாளமாமுனி சீர் தழைப்பச்
சீசயிலேச தயாபாத்திரமெனும் சீர்மந்திரம்
தேசிகனாய்க் கண்டு உரைத்தார் இவ்வையகம் சீருறவே. 13.

## இவர் அருளியுள்ள வரவரமுநி அஷ்டகம் *

ஸகலவேதாந்தஸாரார்த்த பூர்ணாஸயம் விபுலவாதுால கோத்ரோத்பவாநாம்வரம் /
ருசிரஜாமாத்ருயோகீந்த்ரபாசாஸ்ரயம் வரதநாராயணம் மத்குரும் ஸமஸ்ரயே //

பர்யங்கேபி பரம் தத்வம் ரங்கஸாயிநமேவ ய: /
உத்திஷ்டத்யநுபூயாஹும் தம் வந்தே வரயோகிநம் // 1.

உஷஸ்யுத்தாய லோகார்யப்ரமுகாசார்ய ஸூக்திபி: /
உச்சை: ஸ்துத்வாத கோவிந்தம் தத்திவ்யஸ்தலகாஞ்சிதம் // 2.

காவேர்யா: கமலோத்பாஸி ஸம்ஸ்ப்ருஸ்ய ஸலிலம் ஸூபம் /
கோவிந்தகுணஸிலாதி த்யாத்வாSஸ்ருகலிலா நந: // 3.

ரோமாஞ்சிதசலத்தாத்ர: பக்த்யா பரமயைவ ய /
புநாதி தீர்த்தம் ஸங்காஹ்ய தம் வந்தே வரயோகிநம் // 4.

பகவச்சாஸ்த்ரநிர்த்திஷ்ட விதிநைவ நிமஜ்ஜ்ய ய: /
திவ்யகாஷாயசுத்தோர்த்வ புண்ட்ர மாலாதிபூஷித: // 5.

மஹாமந்த்ராதி ஸம்ஜப்ய விஸிஷ்டை: பரிவாரித: /
ஸ்ரீரங்கதாம ஸம்ஸேவ்ய தத்தத்வாந்யுபப்ரும் ஹ்ய ச // 6.

ஆராத்ய ரங்கராஜா தீந் அநுயாகம் விதாய ச /
அபுநாதம்ருதைரார்யாந் தம் வந்தே வரயோகிநம் // 7.

வந்தேஸௌம்யவராக்ர்யயோகிநமஹும் த்யாநாம்ருதா ஸ்வாதிநம்
ஸ்ரீரங்காதிபபாதபங்கஜபரிசார்யாகுணைகாந்திநம் /
ஆஜ்ஞாஸாஸ்த்ர விதேரவிச்யுதமலம் ஸம்ஸாரிகந்தாஸஹும்
காலேஷூத்ரிஷூ சைவ காமிதபலப்ராப்த்யை குரூணாம் குரும் // 8.

*இந்த பாசுரங்கள் யதீந்த்ர ப்ரவணப்ரபாவம் என்கிற நூலின் பழைய பதிப்பிலிருந்து எடுக்கப்பட்டது. ஏதேனும் எழுத்து பிழையிருந்தால் அடியேனை மன்னிக்கவும்.

## கோயில் கந்தாடை அண்ணன் மாமுனிகளை ஆச்ரயித்தல்

தாசரதி (முதலியாண்டான்) வம்சத்திலவதரித்த ஸ்ரீவரதநாராயண குருவர்யரான ஸ்ரீவாதுாலாசார்யர் (கோயில் கந்தாடை அண்ணன்) தர்சநப்ரவர்த்தகராக எழுந்தருளியிருந்த ஸ்ரீமணவாளமாமுனிகளின் அப்ரதிம வைபவத்தையறிந்து ஸ்ரீவானமாமலை ராமாநுஜ ஜீயர் ஸ்வாமியைப் புருஷகாரமாகக் கொண்டு மாமுனிகளின் திருவடிகளை ஆச்ரயித்தார். மாமுனிகளும் ஸ்ரீ வரத நாராயணகுரு ஸ்வாமிக்கு பஞ்ச ஸம்ஸ்காரங்களைப் பண்ணியருளினார்.

பிறகு ஸ்ரீமணவாளமாமுனிகள் ஸ்ரீவரத நாராயண குரு ஸ்வாமியைக் கடாசக்ஷித்து அவருக்கு ஸ்ரீ வானமாமலை ஜீயர் ஸ்வாமியை காண்பித்து `இவர் என்னுடைய ப்ராண ஸுஹ்ருத் (உயிர் நண்பன்), தாசரதி வம்சத்திலெனக்குண்டான அதிசயங்களெல்லாம் இவர்க்குமுண்டாகவேணும் அது எனக்கு அதிப்ரீதிகரம்' என்று நியமிக்க, கோயில் கந்தாடை அண்ணன் ஸ்வாமியும் மாமுனிகளின் திருவுள்ளத்தையறிந்து `தேவரீருக்கு இது திருவுள்ளமாயிருந்தால் முன்னமேயே அடியேன் ஸ்ரீவானமாமலை ஜீயர் ஸ்வாமியின் திருவடிகளில் ஆச்ரயித்திருக்கலாமே. அவ்வாறு அனுக்ரஹிக்கவில்லையே என்று விண்ணப்பிக்க' மாமுனிகளும் `நமக்குக்கிடைத்த அதிசயத்தை நாம் எப்படி விடக்கூடும்' என்றருளிச்செய்தார். மாமுனிகளின் திருவுள்ளக் கருத்தையறிந்த கோயில் அண்ணன் ஸ்வாமியும் தன்னுடைய ஸம்பந்தமுடையவர்களையெல்லாம் வானமாமலை ஜீயர் ஸ்வாமியிடம் ஆஸ்ரயிக்கச் செய்தார்.

இவருடைய வம்சத்தின் பெருமைகளைக் கண்ட மாமுனிகள் இவர் வம்சத்தாரை கீழ்கண்ட 7 கோத்ரக்காரார்களிடமே சம்பந்தம் வைத்துக் கொள்ள அறிவுறுத்தினார்.

1. முதலியாண்டான் வம்சம் - வாதூல கோத்ரம்
2. முடும்பை நம்பி வம்சம் - ஸ்ரீவத்ஸ கோத்ரம்
3. முடும்மையம்மாள் வம்சம் - கௌண்டின்ய கோத்ரம்
4. ஆசூரிப்பெருமாள் வம்சம் - ஹாரித கோத்ரம்
5. கிடாம்பி ஆச்சான் வம்சம் - ஆத்ரேய கோத்ரம்
6. கோமாண்டூர் இளையவில்லி வம்சம் - கௌசிக கோத்ரம்
7. வங்கிபுரத்து நம்பி வம்சம் - பாரத்வாஜ கோத்ரம்

இவருடைய சிற்றண்ணர் திருக்குமாரர் அப்பாச்சியரண்ணா காஞ்சீபுரம் கோவில் நிர்வாகங்களை கவனத்துக் கொண்டிருந்தார். இவர் காஞ்சீபுரம் சென்றிருந்த பொழுது அப்பாச்சியரண்ணாவை தேவப்பெருமாளுக்கு நித்ய திருமஞ்சன கைங்கர்யம் செய்து வரும்படி அறிவுரை வழங்கினார்.

இவர் அருளியுள்ள நூல்கள் - மணவாளமாமுனிகள் கண்ணிநுண் சிறுத்தாம்பு, வரவரமுனி அஷ்டகம், இராமானுஜார்ய திவ்யாஞ்ஞா, உபதேச ரத்னமாலை தனியன் - முன்னந்திருவாய்மொழிப்பிள்ளை.

## பெரியஜீயர் பகவத் ஸம்பந்தாசாரியர் என்று திருநாமம் ஸாதித்தல்

பெரியஜீயர் ஒருநாள் கந்தாடையண்ணனை அழைத்தருளி, பெரிய கந்தாடையப்பன், திருக்கோபுரத்து நாயனார் பட்டர், சுத்தஸத்வமண்ணன், ஆண்டபெருமாள் நாயனார், அய்யனப்பா இவர்களுக்கு பகவத்விஷயம் ப்ரஸாதிக்கும்படி நியமித்தருளி, பகவத் ஸம்பந்தாசாரியர் என்று திருநாமம் ஸாதித்தருளி ஆசார்யஸிம்ஹாஸநத்திலே அபிஷேகம் செய்தருளினார்.

**கோயில் கந்தாடை அண்ணன்_திருவடிகளே சரணம்**

வாசிக தோஷ: சஷந்தவ்ய: